

புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 31, 2019 | புரட்சி 18 | முழக்கம் 03 | விலை: ரூ.3.00


# பொருளாதார இடஒதுக்கீட்டை எதிர்த்து

# மதுரையில் மோடிக்கு கருப்புக் கொடி





*மதுரை வந்த பிரதமர் மோடிக்கு எதிராக பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி காட்டச் சென்ற 500க்கும் அதிகமான தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*

மோடியின் பார்ப்பன இந்துத்துவா கொள்கையினால் தமிழ்நாடு கடும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. அவர் திடீரென்று அறிவித்த 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பால் தமிழ்நாட்டில் நடுத்தர ஏழை மக்களும் தங்களின் வங்கிச் சேமிப்புப் பணத்தை அன்றாட செலவுக்காக எடுப்பதற்கு பல மணி நேரம் கியூவில் காத்திருந்தனர். அவரது இந்தத் திட்டம் படுதோல்வி அடைந்ததது என்பதை ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் உள்ளிட்ட பலரும் குற்றம் சாட்டினர். செல்லாது என்று அறிவிக்கப்பட்டதால், கருப்பு பணம் முடங்கிவிடும் என்ற மோடியின் அறிவிப்பு செல்லாத அறிவிப்பாகி 95 சதவீத கருப்புப் பணம் மீண்டும் வெள்ளைப் பணமாக வங்கிக்கே திருப்பி வந்து விட்டது.

நுழைவுத் தேர்வு கிராமப்புற மக்களைப் பாதிக்கும் என்று தமிழகம் நுழைவுத் தேர்வையே இரத்து செய்திருந்தது. ஆனால் ‘நீட்’ என்ற மத்திய அரசு நடத்தும் நுழைவுத் தேர்வை தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக மோடி ஆட்சி திணித்தது. தமிழ்நாட்டுக்கு ‘நீட்’ தேர்விலிருந்து விதிவிலக்கு தர வேண்டும் என்ற தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒருமித்த தீர்மானத்தை குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குக்கூட அனுப்பி வைக்காமல் மோடி ஆட்சி கிடப்பில் போட்டது. 1200க்கு 1176 மதிப்பெண் பெற்ற அனிதா நீட் தேர்வினால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காமல், தற்கொலை செய்து கொண்டார்.

காவிரிப் பிரச்சினையில் உச்சநீதிமன்ற ஆணைகளைக்கூட மதிக்காமல் கருநாடக தேர்தல் அரசியல் நலனுக்காக தமிழகத்துக்கு எதிராக பச்சை துரோகம் செய்து தமிழக மக்களின் உணர்வுகளோடு விளையாடியது மோடி ஆட்சி. வேறு வழியின்றி உச்சநீதிமன்றத்தின் ஆணைகளுக்காக பணிய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது.

பெரியார் - அம்பேத்கர் பெயரில் அய்.அய்.டி. களில் வாசகர் வட்டம் நடத்தத் தடை போட்டதோடு தமிழ்நாட்டின் கனிம வளங்களைப் பாதிக்கும் ஆபத்தான திட்டங்களுக்கு வழி திறந்து விட்டது. தூத்துக்குடி மக்களுக்கு பேராபத்தை உருவாக்கித் தரும் ‘ஸ்டெர்லைட்’ ஆலை நிர்வாகத்துக்கு ஆதரவாக மக்கள் எதிர்ப்பால் மூடப்பட்ட ஆலையை மீண்டும் திறப்பதற்கு உச்சநீதிமன்ற பார்ப்பன நீதிபதி கோயல் என்பவர் ஓய்வு பெற்ற அடுத்த சில மணி நேரங்களிலேயே பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவராக்கி ஸ்டெர்லைட்டின் வேதாந்தா பார்ப்பன குழுமத்துக்கு ஆதரவாக தீர்ப்பைப் பெற்றுத் தந்தது.

‘ஜி.எஸ்.டி.’ என்ற வரி விதிப்புக் கொள்கையைப் புகுத்தி மாநிலங்களின் வரி விதிப்புக் கொள்கை அதிகாரங்களைப் பறித்தது. பல சிறு, குறுந் தொழில் நிறுவனங்கள் இந்தக் கொள்கையால் தமிழகத்தில் மூடப்பட்டன.


எச். ராஜா போன்ற பார்ப்பனர்களும் ‘இந்து முன்னணி’ என்ற பெயரில் சில ‘சூத்திர’த் தமிழர்களும் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பெரியாரை - திராவிட இயக்கங்களை தரம் தாழ்ந்து பேச அனுமதித்ததோடு பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்று ‘திமிரோடு’ அறிக்கை விடுத்தனர். மாநில அரசை ஆட்டிப் படைத்து டில்லியிலிருந்து கொண்டு தமிழ்நாட்டில் ஒரு ‘பினாமி’ ஆட்சியை நடத்தியதோடு தமிழகக் காவல்துறையையும் தனது விருப்புவெறுப்புக்கேற்ப ஆட்டிப் படைத்து வருகிறது, மோடி ஆட்சி!

இப்போது உயர்ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் 10 சதவீத இடஒதுக்கீட்டை அமைச்சரவையில் முடிவெடுத்த அடுத்த மூன்று நாட்களில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று நடைமுறைக்கும் கொண்டு வந்துவிட்டது. பார்ப்பனர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் ‘சமூகக் கல்வி ரீதியாக’வும் வரலாற்று ரீதியாகவும் புறக் கணிக்கப்பட்ட சமூகத்துக்கு சமூக நீதி வழங்கு வதற்காகவே கொண்டு வரப்பட்ட இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைத்து புதைக்குழிக்கு அனுப்பி விட்டது.

இந்த ‘பொருளாதார அடிப்படை’ என்ற ஆபத்தான இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே அழிக்கும் முயற்சிக்கு எதிராக ஜனவரி 27ஆம் தேதி மதுரை வந்த பிரதமர் மோடிக்கு கருப்புக் கொடி காட்ட பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு முடிவு செய்தது. இதில் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் கூட்டமைப்பு சார்பில் பங்கேற்று கைதானார்கள்.

மதுரையில் கூடிய கூட்டமைப்பின் நூற்றுக் கணக்கான தோழர்கள் கருஞ்சட்டையுடன், கருப்பு கொடி ஏந்தி, ஆர்எஸ்எஸ்-பாஜகவின் தமிழர் விரோத செயல்களை கண்டித்து ‘மோடியே திரும்பிப் போ’ என முழக்கமிட்டனர். தந்தைப் பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கு. இராம கிருஷ்ணன், தமிழ்ப்புலிகள் கட்சி தலைவர் நாகை. திருவள்ளுவன், விடுதலை தமிழ்புலிகள் கட்சி தலைவர் குடந்தை அரசன், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் டைசன், காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம் முகிலன், தமிழ்நாடு மக்கள் கட்சி தலைவர் மீ.த.பாண்டியன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் ஏராளமான தோழர்களோடு கலந்து கொண்டனர். கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

## ‘வீர சாவர்க்கார் யார்?’ நூல் விற்பனைக்குத் தயார்




விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘வீரசவர்க்கார் புதைக்கப்பட்ட உண்மைகள்’ இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது. நூலின் விலை ரூ.25. பக்கங்கள் 40.

‘நாளை விடியும்’ இதழாசிரியரும் பெரியாரியலாளருமான திருச்சி அரசெழிலன், தனது சொந்த செலவில் இந்த நூலை அச்சிட்டு கழகத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். ஏற்கனவே ‘காந்தியைத் துளைத்த கோட்சேயின் குண்டுகள்’ எனும் விடுதலை இராசேந்திரன் எழுதிய நூலை இதேபோல் தனது சொந்த செலவில் அச்சிட்டு கழகத்துக்கு வழங்கினார்.

கழகத்தின் இயக்கப் பணிகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தோழர் அரசெழிலன் அவர்களுக்கு கழக சார்பில் நன்றி தெரிவிக்கிறோம்.

**– ஆசிரியர், புரட்சிப் பெரியார் முழக்கம்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.01.2019**

# பா.ஜ.க. மண்டல் பரிந்துரையை ஆதரித்ததா? வரலாற்றுப் புரட்டுகளுக்கு மறுப்பு

*தொலைக்காட்சி விவாதங்களில் பேசி வரும் சில பா.ஜ.க.வினர், மண்டல் பரிந்துரையை நியமித்தது தங்கள் கட்சி தான்; அதை ஆதரித்ததும் தங்கள் கட்சி தான் என்றும் வாதிட்டு வருகிறார்கள். இது அப்பட்டமான பொய்.*

*மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா கட்சி ஆட்சி வந்தபோது ஜனதாவில் ஜன சங்கமும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது. அந்த அமைச்சரவையில் வாஜ்பாய் வெளிநாட்டுத் துறை அமைச்சர், உள்துறை அமைச்சர் சரண்சிங், ஜாட் சமூகத்தைச் சார்ந்த விவசாயியான சரண்சிங், பிற்படுத்தப் பட்டோர் உரிமைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அவரது முயற்சியால் அமைக்கப்பட்டது தான் மண்டல் ஆணையம். தொடர்ந்து மொரார்ஜி ஆட்சி கவிழ்ந்து சரண்சிங் பிரதமராக சில மாத காலம் நீடித்தபோது பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டுக்கு அரசாணை பிறப்பிக்கும் முயற்சிகளில் சரண்சிங் ஈடுபட்டார். பார்ப்பன அதிகாரவர்க்கம் அந்த முயற்சியை முறியடித்தது.*

*1980இல் மண்டல் பரிந்துரை அரசிடம் வழங்கப்பட்டது. ஆட்சிக்கு வந்த இந்திரா, மண்டல் பரிந்துரையை கிடப்பில் போட்டார். 1990ஆம் ஆண்டு தான் வி.பி. சிங், பிரதமராக வந்த பிறகு ஆகஸ்ட் 7ஆம் தேதி மண்டல் பரிந்துரையில் ஒரு பகுதியை மட்டும் 27 சதவீத இடஒதுக்கீட்டை அரசுப் பதவிகளில் ஒதுக்கீடு செய்யும் ஆணையைப் பிறப்பித்தார். அப்போது வி.பி.சிங் ஆட்சிக்கு பா.ஜ.க.வும் இடதுசாரி கட்சிகளும் வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்தன. வி.பி.சிங் அமைச்சரவையில் இடம் பெறவில்லை. பா.ஜ.க. ஆதரவைத் திரும்ப பெற்றுக் கொண்டால், வி.பி.சிங் ஆட்சிக்கு பெரும்பான்மை பலம் இருக்காது என்ற நிலை இருந்தது.*

*வி.பி.சிங் அறிவிப்பை ஆவேசமாக எதிர்த்தது ஆர்.எஸ்.எஸ். ‘இந்து தேசத்தை’ப் பிளவுபடுத்துகிறார் என்று கூறிய ஆர்.எஸ்.எஸ்., அதன் அதிகாரபூர்வ ஏடான ‘ஆர்கனைசர்’ பத்திரிகையில் முதல் பக்கத்தில் ‘ராஜாவின் (வி.பி.சிங்கின்) ஜாதி யுத்தம்’ என்ற தலைப்பிட்டு கீழ்க்கண்டவாறு எழுதியது:*

*“150 ஆண்டுகால அன்னிய ஆட்சியான பிரிட்டிஷ் ஆட்சி சாதிக்க முடியாத ஒன்றை ஒரே ஆண்டில் சாதித்துக் காட்டுவேன் என்று வி.பி.சிங் மிரட்டுகிறார். இந்து சமூகத்தை ஒற்றுமைப்படுத்த விவேகானந்தரும், தயானந்த சரசுவதியும், மகாத்மா காந்தியும் டாக்டர் ஹெட்கேவரும் மேற்கொண்ட மாபெரும் முயற்சிகளை சிதைக்கத் துடிக்கிறார் வி.பி.சிங். சமூகத்தை மண்டல் மயமாக்கி, வி.பி.சிங் சாதிக்க விரும்புவதெல்லாம் இந்து சமூகத்தை, முன்னேறியவர்கள், பிற்படுத்தப்பட்டோர், அரிஜன் என்பதாகக் கூறு போட வேண்டும் என்பது தான்” என்று ‘ஆர்கனைசர்’ ஏடு எழுதியது.*

(V.P. Singh threatens to achieve in one year what the British could not do in these 150 year long alien rule.......... He wants to undo the great task of uniting Hindu society from the days of Vivekananda, Dayananda Saraswathi, Mahathma Gandhi and Dr. Hedgewar...... what V.P. Singh through Mandalisation of the society intends to achieve is a division of Hindus on forward, backward and Harihjan lives......... (‘Organisar’ 26, Aug. 1990. Page 1)

*மண்டல் பரிந்துரையை அமுலாக்கியதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். வெளியிட்ட கருத்து இது தான். வி.பி.சிங் தான், ‘இந்து’ சமூகத்தை ஜாதி அடிப்படையில் கூறு போட்டாரா? ‘வர்ணாஸ்ரம’ காலந்தொட்டு, இந்து சமூகத்தைப் பிளவுப்படுத்தி உயர்வு தாழ்வை நிலை நிறுத்திய பார்ப்பனியக் கொடுமைகளை இவர்கள் மறைத்தாலும், வரலாறு மறக்குமா? அந்த ஏற்றத் தாழ்வை சரி செய்வதற்காகவே வந்த சமன்பாட்டுக் கொள்கை எப்படி, இந்து சமூகத்தைப் பிளவுபடுத்தும்?*

*மண்டல் பரிந்துரைக்குப் பிறகுதான் இந்து சமூகத்தில் ஜாதியே வந்ததா? பதில் சொல்லட்டும். இடஒதுக்கீடு என்பதே இந்து சமூகத்தைக் கூறு போடுவது என்பது இவர்கள் கருத்து என்றால் இப்போது முன்னேறிய ஜாதியினருக்கு இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். கருத்தைப் பொருத்திப் பார்த்தால், பா.ஜ.க. ஆட்சி இந்து சமூகத்தைக் கூறுபோட்டு, இந்துக்களுக்கு துரோகம் இழைத்திருக்கிறது; அப்படித் தானே? பதில் சொல்வார்களா?*

*வி.பி. சிங், 27 சதவீத இடஒதுக்கீட்டை அறிவித்தவுடன் அயோத்தியில் இராமன் கோயில் கட்ட இரதயாத்திரைப் புறப்பட்டார், அன்றைய பா.ஜ.க. தலைவர் அத்வானி. பல இடங்களில் கலவரம் வெடித்தது. இந்து மதவெறியை ஊதி விட்டது இந்த இரத யாத்திரை. பீகார் மாநிலத்துக்குள் இந்த யாத்திரை நுழைய அன்றைய முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் அனுமதிக்கவில்லை. லல்லு பிரசாத், வி.பி.சிங் அணியில் இருந்தார். உடனே வி.பி.சிங் ஆட்சிக்கு வெளியிலிருந்து வழங்கிய ஆதரவைத் திரும்பப் பெற்று, வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்க்க வழி வகுத்தது பா.ஜ.க. இவர்கள்தான் மண்டல் பரிந்துரையை ஆதரித்ததாக வெட்கப் படாமல் பொய் பேசுகிறார்கள். வி.பி.சிங் மண்டல் பரிந்துரையை அமுல்படுத்தியதால் தான் இராமன் கோயில் கட்டும் பிரச்சினையை உடனே கையில் எடுத்ததாக அத்வானியே ஒப்புக் கொண்டிருக்கிறார். அத்வானி அப்போது தந்த பேட்டி இது.*

*27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிராக வி.பி.சிங் ஆட்சியை எதிர்த்து டெல்லியில் மாணவர்கள் கலவரம் செய்தனர். இராஜீவ் கோஸ்வாமி என்ற உயர்ஜாதி மாணவர் உடலுக்கு தீ வைத்துக் கொண்டார் (இது திட்டமிட்டு நடந்த எரிப்பு என்ற குற்றச் சாட்டும் எழுந்தது). 55 சதவீத தீப்புண் காயத்துடன் புதுடெல்லி சப்தர்ஜங் மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அந்த நிலையில் அத்வானி, ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேட்டுக்கு ஒரு பேட்டி அளித்தார். அந்தப் பேட்டி, அத்வானியின் இடஒதுக்கீடு எதிர்ப்பை அப்படியே வெளிச்சப்படுத்துகிறது. இதோ, அந்தப் பேட்டி:*

**“புதுடெல்லியில் இடஒதுக்கீட்டை எதிர்த்து மாணவர்கள் தீக்குளித்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் மாணவர்களின் பெற்றோர்கள் என்னை, வீடு தேடி வந்து சந்திக்கிறார்கள். இன்னும் ஏன் இந்த ஆட்சிக்கு ஆதரவு தருகிறீர்கள்? ஆதரவைத் திரும்பப் பெறுங்கள்” என்று வற்புறுத்தி வருகிறார்கள். மண்டல் பிரச்சினையைக் காரணம் காட்டி, ஆதரவைத் திரும்பப் பெற்றால், அது அரசுக்கு பெரும் பயனைத் தேடிக் கொடுத்து விடும் என்றே நான் உணர்ந்தேன். என்னைத் தேடி வந்த பெற்றோர்களிடம் நான் கூறினேன்:**

**“நீங்கள் சொல்லும் கருத்தில் எனக்கு முழு உடன்பாடு உண்டு. இந்த அரசு (இட ஒதுக்கீடு பிரச்சினையில்) மிக மோசமாக செயல்பட்டு வருகிறது என்பது உண்மை தான். உரிய நேரத்தில் நாங்கள் அரசுக்கு எதிரான நடவடிக்கையை எடுப்போம்.”**

(New Delhi, where the self immolation had taken place, parents used to come to my place daily. “Why are you supporting the government? Withdraw your support”. I felt that withdrawing our support on the issue of Mandal would be of an enormous benefit to the government. I said ‘ I agree with you that the government is behaving very badly but we will take action at the appropriate time’. - Advani - Hindustan Times, 21 Sep. 1990)

*அத்வானி தந்த விளக்கம் இது. இதுதான் பா.ஜ.க. - வி.பி.சிங் கொண்டு வந்த இடஒதுக்கீடு உத்தரவை ஆதரித்ததன் அடையாளமா? தொலைக்காட்சியில் பேசும் ‘பூணூல்’களே? இதற்கு பதில் உண்டா?*

*தன் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை துணிவோடு எதிர் கொண்டார் வி.பி.சிங். அவரே நம்பிக்கைக் கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் பேசினார்.*

*“27 சதவீத இடஒதுக்கீட்டை ஆதரிப்போர் யார்? எதிர்ப்போர் யார்? இதை இந்த ஓட்டெடுப்பு வழியாக மக்கள் அறிந்து கொள்ளட்டும். என்னுடைய ஆட்சி வீழ்த்தப் பட்டாலும், நான் அமர்ந்திருந்த பிரதமர் இருக்கையில் யார் வந்து அமர்ந்தாலும் 27 சதவீத இடஒதுக்கீட்டை ஒழித்து விட்டு, இந்த நாற்காலியில் ஒரு நிமிடம்கூட உட்கார முடியாது” என்று வி.பி.சிங் நாடாளுமன்றத்தில் கம்பீரமாக முழக்கமிட்டார்.*

*ராஜிவ் காந்தி இடஒதுக்கீட்டுக்கு எதிராக தண்ணீரைக் குடித்துக் கொண்டே நீண்ட நேரம் பேசினார். பா.ஜ.க.வும், இடஒதுக்கீட்டுக்கு ஆதரவு தரவில்லை. அப்போது எதிர்கட்சி அணியிலிருந்து கொண்டே வி.பி.சிங்குக்கு ஆதரவாக வாக்களித்த ஒரே உறுப்பினர், தமிழ்நாட்டைச் சார்ந்த முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் அப்துல் சமது ஒருவர் மட்டும் தான். வாக்கெடுப்பில் வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்தது. சமூக நீதி சரித்திரத்தில் அந்த இலட்சியத்துக்காக தனது பிரதமர் பதவியையும் தூக்கி எறிந்த ஒரே வரலாற்று நாயகர், வி.பி.சிங் தான்.*

*இந்த வரலாறுகளை எல்லாம் மூடி மறைத்து, மண்டல் பரிந்துரையை ஆதரித்ததாக வரலாற்றுக்கு மாறான அப்பட்டமான பொய்யுரைகளை பா.ஜ.க.வினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் சுட்டிக்காட்டிய அத்வானி பேச்சுகளை பா.ஜ.க.வால் மறுக்க முடியுமா? சவால் விடுகிறோம்!*

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.01.2019**


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

*கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை, ‘கரண்ட்’ அக்கவுண்ட்*

எண் : 1257115000002041 – IFSC KVBL0001257

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆9841489896

**முக்கிய அறிவிப்பு**

டிசம்பர் (2018) மாதத்தோடு சந்தா முடிவடைந்த வாசகர்களுக்குப் பிப்ரவரியிலிருந்து இதழ் அனுப்புவது நிறுத்தப்பட்டது. தோழர்கள் சந்தாவைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

**– நிர்வாகி**

ஆண்டுக்கட்டணம் **ரூ.200**

## பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (6)

# வைக்கம் போராட்டம்: பெரியாரே கூறும் வரலாறு

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து.*

பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் குறித்து இங்கே நான் பேசும் கருத்துகள் இளைய தலைமுறையினருக்கு வரலாறுகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான். பொதுவாக பெரியார் இயக்கத்தினருக்கு இது ஏற்ககனவே தெரிந்த வரலாறுகள்தான் என்றாலும் இளைய தலைமுறைக்கு நாம் அதைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது வைக்கம் போராட்டம் வரலாறு குறித்து பெரியார் ஆற்றிய உரையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இது பெரியார் சந்தித்த அடக்குமுறைகளில் ஒன்றாகக் குறிப்பிடலாமே தவிர, பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறையாகக் குறிப்பிட முடியாது. காரணம் இந்தப் போராட்டம் நடந்தபோது பெரியார், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர். போராட்ட வரலாறு குறித்து 1959ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி குமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் பெரியார் நிகழ்த்திய இந்த உரை முக்கியத்துவம் நிறைந்தது.

மார்த்தாண்டத்தில் பெரியார் நிகழ்த்திய உரை:


வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலிருந்துதான்.

தோழர் மாதவன் என்ற பி.ஏ.பி.எல். படித்த வக்கீல் ஒரு வழக்குக்காக (நீதிமன்றத்திற்கு) ஆஜராகப் போனார் வழக்கு விசாரணைக்காக. கோர்ட் இடம் இராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்) ஓர் இடம். இராஜாவின் பிறந்த நாள் விழாவிற்கு அந்த இராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்) எல்லாப் பக்கங்களிலும் பந்தல் போட்டதில் கோர்ட் நடக்கும் இடமும் பந்தலுக்குள் ஆகி ஒரு கேசில் (வழக்கில்) ஆஜராக அங்கே போக வேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக முறை ஜெபம் ஆரம்பமாயிற்று. அங்கே இந்த வக்கீல் ஈழவ (நாடார்) சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால் அங்கே போகக் கூடாது என்று தடுத்தார்கள்.

அந்த நேரம் நான் தமிழ்நாட்டிலே தீண்டாமை விலக்கு என்பதில் தீவிரமாக இருந்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்த நேரம்! கலப்பு மணம், சமபந்தி போஜனம், எல்லோரும் பள்ளிக் கூடத்தில் படிக்க வேண்டும் என்பன போன்ற கருத்துகளில் தீவிர நம்பிக்கைக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும், பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துத் தான் காந்தியும் அவற்றை நிருமாணத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். அந்தக் காலத்தில் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சிக்காரர் நல்லபடி வெளியாக்கி வெளுத்து வாங்குவார்கள். ரோட்டிலே (சாலையிலே) பார்ப்பனர்கள் அப்போது தைரியமாகத் தனியே நடக்கக்கூட முடியாது. டி.எம்.நாயரும், தியாகராயரும், ஜஸ்டிஸ் இயக்கமும் ஜனங்களிடத்தில் (மக்கள்) தீவிரமாகப் பிரச்சாரம் செய்து, பார்ப்பனரல்லாதாரின் ஆதரவைத் திரட்டி, ஆட்சியைப் பெற்று ஆண்டு கொண்டிருந்தது. பார்ப்பனர்கள் அவர்களைக் கண்டு நடுங்குவார்களே! பார்ப்பனர்களுக்கு மேடையே இல்லாமல் போன காலம் அது!

அப்போதெல்லாம் பார்ப்பனர்கள் எங்களுக்கு ஆட்சி வேண்டாம்; அதிகாரம் வேண்டாம்; சட்டசபை வேண்டாம்; என்று குள்ளநரித் தந்திரம் செய்து மக்களை வசப்படுத்தச் சதி செய்து கொண்டு இருந்த காலம். அந்தக் காலத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு (நீதிக் கட்சிக்கு) இருந்த செல்வாக்கைக் கண்டு வஞ்சக மனத்தோடு பித்தலாட்டக் கருத்துக் கொண்ட தீண்டாமை விலக்கு என்பதைத் தங்கள் திட்டத்தில் காந்தி சேர்த்தார்.

அந்தக் காலத்தில் நான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு மிகவும் வேண்டியவனாகத்தான் இருந்தேன். என்னை நிரம்பவும் மதிப்பார்கள். காரணம், நான் எல்லாப் பதவிகளிலும் இருந்து வந்தவன். திரு. இராஜகோபாலாச்சாரியாரே வந்து சமுதாயச் சீர்திருத்தம் தானே நமக்கு வேண்டும். அது காந்தியால்தான் முடியும் என்று சொல்லி என்னைக் காந்திக்கு சிஷ்யன் ஆக்கினார். நானும் சேர்மன் (ஈரோடு நகர் மன்றத் தலைவர்) பதவியை இராஜிநாமா



**டாக்டர் வரதராஜலு, கல்யாணசுந்தரனார், சிதம்பரனார், நான் ஆகிய நால்வரில் பார்ப்பனர்கள் என்னைத்தான் முன்னே தள்ளுவார்கள்! என்னைப் பார்த்து பதவி வேட்டைக்காரன் என்று எவரும் சொல்ல முடியாது என்பதால் பார்ப்பனர்களும் நான் என்ன சொன்னாலும் வாயை மூடிக் கொண்டுதான் இருப்பார்கள்.**

கொடுத்து வெளியேறி, காங்கிரசில் சேர்க்கப்பட்டு விட்டேன். சென்ற பிறகு தமிழன் ஒருவனுக்காவது அதுவரை கிடைத்திருக்காத தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர், தலைவர் இடத்தில் உட்கார வைத்தார்கள்.

ஏனென்றால், திரு.வி.க. சாதாரணமாக ஒரு பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தவர். டாக்டர் வரதராஜலு அவர்கள் வாரப் பத்திரிகை நடத்தி வந்தார் என்றாலும் பார்ப்பனர்கள் அவரை அவ்வளவு நம்ப மாட்டார்கள். திடீரென அவர்களை யாரும் மாற்றி விடலாம் என்று அவர்களுக்குத் தெரியும். வ.உ.சிதம்பரனார் ஒருவர். அவர் பாவம்! எல்லாவற்றையும் விட்டு நொடித்துப் போய் கஸ்தூரிரங்க அய்யங்கார் தயவில் இருந்தவர். அதனால் சிறிது வசதி உள்ளவன்; பெரிய வியாபாரி; பதவிகளை விட்டு வந்தவன் என்கிற முறையில் இராஜகோபாலாச்சாரியார் என்னைத்தான் நம்பி எதற்கும் எனக்கு மதிப்புக் கொடுத்து முன்னே வைப்பார்.

உண்மையாகவே நானும் அதை நம்பி அவரிடம்மிக்க விசுவாசமாக இருந்து பெரிய பிரச்சாரம் செய்து பார்ப்பனருக்கு நாங்கள் மேடை தேடிக் கொடுத்து விட்டோம்! அப்போதே நான் நாம் தொட்டால் தீட்டுப் பட்டுவிடும் என்கிற சாமி நமக்கு எதற்கு? அதை எடுத்து ரோட்டுக்கு ஜல்லி போடணும்; அல்லது ஆற்றிலே தூக்கிப் போட்டு வேட்டி துவைக்கப் போடணும், இப்படித்தான் பேசுவேன். டாக்டர் வரதராஜலு, கல்யாண சுந்தரனார், சிதம்பரனார், நான் ஆகிய நால்வரில் பார்ப்பனர்கள் என்னைத்தான் முன்னே தள்ளு வார்கள்! என்னைப் பார்த்து பதவி வேட்டைக்காரன் என்று எவரும் சொல்ல முடியாது என்பதால் பார்ப்பனர்களும் நான் என்ன சொன்னாலும் வாயை மூடிக் கொண்டுதான் இருப்பார்கள்.

சாதி, மதம், கடவுள் துறையில் இப்பொழுது சொல்லுவதெல்லாம் நான் அப்போதே சொல்லுவேன். நான் பேசி முடித்து வந்ததும் ஆச்சாரியார் சொல்லுவார். நாயக்கர் உங்களுடையது ரொம்ப (நிறைய) ஸ்ட்ராங் டோஸ் என்று சொல்லுவார். நான் சொல்லுவேன் நீங்க என்னங்க, இந்த மடப் பசங்களுக்கு ஸ்ட்ராங் என்ன, லேசு என்னங்க, என்று சொல்லித் தப்பித்துக் கொள்வேன். அவரும் வேறு வழி இல்லாததால் சிரித்துக் கொள்ளுவார். அந்த மாதிரி முறையில் நாட்டைப் பார்ப்பனர் கைக்குப் போகும்படியான அளவுக்குப் பக்குவப்படுத்தி விட்டோம்.

இந்த மாதவன் (வக்கீல்) சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். வக்கீல் மாதவன், டி.கே. மாதவன் (கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர்), கே.பி. கேசவமேனன் இவர்களெல்லாரும் இன்னும் சிலரும் சேர்ந்து முடிவு செய்தார்கள். முறை ஜெபத்தன்று சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாக் கிரகம் ஆரம்பிக்கலாமென்பதற்கு வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால், அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும், அதன் 4 வாயிலுக்கு எதிரிலும் 4 நேர்வீதிகளும், கோயில் மதில்கள், சுற்றியும் தெருக்கள், பிரகாரம் எல்லாமும் இருக்கும்.

அந்த வீதிகளில் கீழ்ச்சாதிக்காரர்களான அவர்ணஸ்தர்கள் எல்லோரும், ஆயித்தார்கலி எனப்படும் தீண்டாதாரும் நான்கு புறத்திலும் கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக் கூடாது! மூன்று ஃபர்லாங் தூரத்திலேயும், 4 ஃபர்லாங்கு தூரத்திலேயும் இருக்கிற ரோட்டில் (சாலையில்) கூட நடக்காமல் ஒரு மைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக் கொண்டுதான் எதிர் ரோட்டுக்குப் போக வேண்டும். தீண்டப்படாதவர்களைப் போலவேதான், ஈழவர்கள், ஆசாரிகள், வணிகர்கள், நெசவாளிகள் முதலியோரும் அந்த ரோட்டில் நடந்து போகக் கூடாது.

இதே மாதிரிதான் சுசீந்திரத்திலும் உள்ள கோயில் மற்றும் அந்த இராஜ்ஜியத்தில் உள்ள மற்றக் கோயில்கள் பக்கமும் அமைந்துள்ள தெருக்களிலும் நடக்க இவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில்தான் எல்லா முக்கிய ஆபீசுகளும் (அலுவலகங்களும்), கோர்ட் (நீதி மன்றம்), போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ, இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதனாலுங்கூட கீழ்ச்சாதியார்களை அங்கு மாற்ற மாட்டார்கள். ஏனென்றால், அந்த போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்கள் இருக்கும் இடத்திற்குப் போக கீழ்ச்சாதியார்களுக்கு அனுமதி கிடையாது என்பதால், முக்கியமான கடைகளும் இந்த வீதிகளில்தான். ஆனதால் கீழ்ச்சாதிக் கூலிகள் அங்குச் செல்ல முடியாது.

சத்தியாக்கிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப் போல் சுமார் 19 பேரை இராஜா அரஸ்ட் (கைது) செய்யும்படி உத்தர விட்டு, அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து, அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் (தனிப்பட்ட) கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் மிஸ்டர் பிட் என்ற ஒரு வெள்ளைக்காரர் போலீஸ் அய்.ஜி.யாக இருந்தார். அவர் இந்தப் பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டு விட்டவுடன், அடுத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட யாரும் முன் வர ஆள் கிடைக்கவில்லை. அதோடு அதுவும் நின்று விடும் போலத் தோன்றியது. உடனே எனக்கு ஜார்ஜ் ஜோசஃபும், பாரிஸ்டர் கேசவமேனனும் சேர்ந்து கையொப்பம் போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள்.

நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கணும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதானால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை என்றாலும், பெரிய காரியம் கெட்டுப் போகுமே என்று கவலைப்படுகிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்க வேண்டும் என்று எழுதி அனுப்பினார்கள்.

எனக்கு ஏன் எழுதினார்கள் என்றால் தீண்டாமைப் பற்றி பேசுவதில் நான் கெட்டிக்காரன்; கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பேர்; நான் அப்போது சுற்றுப் பிரயாணத்தில் இருந்தேன்.

ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் ரீ டைரக்ட் செய்யப்பட்டு மதுரை ஜில்லாவில் உள்ள பண்ணப்புரம் என்ற ஒரு மலைப்பக்க கிராமத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவன் என்ற முறையில் நான் பேசிக் கொண்டிருந்தபோது எனக்குக் கிடைத்தது.

உடனே, மீதி சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு நேரே ஈரோட்டுக்குப் போனேன்; வீட்டுக்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய்ச் சத்தியாகிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டைக் கட்டிவிட்டேன்; திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும் வரை தலைமைப் பதவி ஏற்றுக் கொள்ளும்படி ஒரு கடிதம் எழுதிவிட்டு, இந்தச் சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு; இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலை செய்ய வேறு கிடைக்காது என்ற எழுதி விட்டு 2 பேரை கூட்டிக் கொண்டு வைக்கத்திற்கு வந்தேன்.

**(பெரியார் வரலாற்று உரையின் தொடர்ச்சி அடுத்த இதழில்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பார்ப்பனர்களுக்கே பாரத ரத்னா குத்தகையா?

கடந்த 65 ஆண்டுகளில் பாரத ரத்னா விருதைப் பெற்றவர்களில் 48 விழுக்காட்டுக்கும் அதிகமானவர்கள் பார்ப்பனர்களாகவே உள்ளனர். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இதுவரையில் பாரத ரத்னா விருது பெற்றவர்களில் 80 விழுக்காட்டினர் உயர் ஜாதியினர்கள் மட்டும்தான். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களில் பாரத ரத்னா விருது பெற்றவர்கள் 20 விழுக்காட்டுக்கும் குறைவாகவே உள்ளனர்.

இதுவரையில் பாரத ரத்னா விருது பெற்றவர்களின் பெயர்கள் ஆண்டுவாரியாக, அவர்களின் ஜாதியப் பின்புலத்தோடு கீழே காணலாம்.

1. சி.ராஜகோபாலாச்சாரி (1954) – பார்ப்பனர் (ஓ.சி)
2. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் (1954) – பார்ப்பனர் (ஓ.சி)
3. சி.வி.இராமன் (1954) – பார்ப்பனர் (ஓ.சி)
4. பகவான் தாஸ் (1955) – அகர்வால் (ஓ.சி)
5. விஸ்வேசுவரய்யா (1955) – பார்ப்பனர் (ஓ.சி)
6. ஜவகர்லால் நேரு (1955) – பார்ப்பனர் (ஓ.சி)
7. கோவிந்த் வல்லப் பந்த் (1957) – பார்ப்பனர் (ஓ.சி)
8. தோண்டோ கேசவ் கார்வே (1958) – பார்ப்பனர் (ஓ.சி)
9. பிதான் சந்திர ராய் (1961) – கயஸ்தா (ஓ.சி)
10. புருசோத்தம் தாஸ் தாண்டன் (1961) – காத்ரி (ஓ.சி)
11. இராஜேந்திரப் பிரசாத் (1962) – கயஸ்தா (ஓ.சி)
12. ஜாகீர் உசேன் (1963) – முஸ்லிம்
13. பாண்டுரங்க வாமன் காணே (1963) – பார்ப்பனர் (ஓ.சி)
14. லால் பகதூர் சாஸ்திரி (1966) – கயஸ்தா (ஓ.சி)
15. இந்திரா காந்தி (1971) – பார்ப்பனர் (ஓ.சி)
16. வி. வி. கிரி (1975) – பார்ப்பனர் (ஓ.சி)
17. காமராசர் (1976) – நாடார் (ஓ.பி.சி)
18. அன்னை தெரேசா (1980) – கிறிஸ்துவர்
19. ஆச்சாரியா வினோபா பாவே (1983) – பார்ப்பனர் (ஓ.சி)
20. கான் அப்துல் கஃப்பார் கான் (1987) – முஸ்லிம்
21. எம்.ஜி.ராமச்சந்திரன் (1988) – நாயர்
22. அம்பேத்கர் (1990) – மகர் (எஸ்.சி)
23. நெல்சன் மண்டேலா (1990)
24. ராஜீவ் காந்தி (1991) – பார்ப்பனர் (ஓ.சி)
25. வல்லபாய் பட்டேல் (1991) – பதிதார்
26. மொரார்ஜி தேசாய் (1991) – பார்ப்பனர் (ஓ.சி)
27. மவுலானா அபுல் கலாம் ஆசாத் (1992) – முஸ்லிம்
28. ஜே. ஆர். டி. டாட்டா (1992) – பார்சி
29. சத்யஜித் ராய் (1992) – கயஸ்தா (ஓ.சி.)
30. குல்சாரிலால் நந்தா (1997) – காத்ரி (ஓ.சி)
31. அருணா ஆசஃப் அலி (1997) – முஸ்லிம்
32. ஏ.பி.ஜே.அப்துல் கலாம் (1997) – முஸ்லிம்
33. எம். எஸ். சுப்புலட்சுமி (1998) – (Not Available)
34. சி. சுப்பிரமணியம் (1998) – கொங்கு வேளாளர் (ஓ.பி.சி)
35. ஜெயபிரகாஷ் நாராயண் (1999) – கயஸ்தா (ஓ.சி)
36. அமர்த்தியா சென் (1999) – கயஸ்தா (ஓ.சி)
37. கோபிநாத் போர்டோலாய் (1999) – பார்ப்பனர் (ஓ.சி)
38. ரவி சங்கர் (1999) – பார்ப்பனர் (ஓ.சி)
39. லதா மங்கேஷ்கர் (2001) – பார்ப்பனர் (ஓ.சி)
40. உஸ்தத் பிஸ்மில்லா கான் (2001) – முஸ்லிம்
41. பீம்சென் ஜோஷி (2009) – பார்ப்பனர் (ஓ.சி)
42. சி.என்.ஆர். ராவ் (2014) – பார்ப்பனர் (ஓ.சி)
43. சச்சின் டெண்டுல்கர் (2014) – பார்ப்பனர் (ஓ.சி)
44. அடல் பிகாரி வாஜ்பாய் (2015) – பார்ப்பனர் (ஓ.சி)
45. மதன் மோகன் மாளவியா (2015) – பார்ப்பனர் (ஓ.சி)
46. நானாஜி தேஷ்முக்த் (2019) – பார்ப்பனர் (ஓ.சி)
47. பிரணாப் முகர்ஜி (2019) – பார்ப்பனர் (ஓ.சி)
48. பூபென் ஹசாரிகா – (Not Available)

இதுவரையில் பழங்குடியினருக்கு ஒருமுறை கூட பாரத ரத்னா விருது வழங்கப்படவில்லை. அதிகபட்சமாக முன்னேறிய சமூகத்தினர் 32 பேர் பாரத ரத்னா விருதைப் பெற்றுள்ளனர். முன்னேறிய சமூகத்தினரிலும் 23 பேர் பார்ப்பனர்கள் மட்டுமே. ஆறு பேர் முஸ்லிம்கள். ஒருவர் பட்டியலினத்தவர். இருவர் பிற்படுத்தப்பட்டவர்கள். இப்போது பிரணாப் முகர்ஜிக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலம் காங்கிரஸ் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த வங்காள வைதீகப் பார்ப்பனர். பிறகு காங்கிரஸ் கட்சியில் குடியரசுத் தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். பா.ஜ.க. அதிகாரத்துக்கு வந்த பிறகு அதன் விசுவாசியானார். பதவி ஓய்வுக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்துக்குப் போய் தனது ‘சங்கிகள்’ ஆதரவை வெளிப்படுத்தினார். அதிகாரத்தில் நீண்டகாலம் அமர்ந்து கொண்டு நாற்காலியைத் தேய்த்ததைவிட இவரது சமுதாயத் தொண்டு சாதனை ஏதாவது உண்டா? மற்றொருவர் ஆர்.எஸ்.எஸ்.காரரான நானாஜி தேஷ்முக்.

பாரத ரத்னாவுக்கு புகழ் சேர்த்த ஒரே பிரதமர் வி.பி.சிங் தான். அவரது ஆட்சியில் தான் புரட்சியாளர் அம்பேத்கருக்கும் தென்னாப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவுக்கும் பாரத ரத்னா வழங்கி அந்த விருதை கவுரவப்படுத்தினார்.

## ஈழ விடுதலைப் போராளி முத்துக்குமாருக்கு தோழர்கள் வீர வணக்கம்



தமிழீழ விடுதலைக்காக தன்னுயிரை ஈகம் செய்த முத்துக்குமார் நினைவு நாளான 29.1.2019 அன்று கொளத்தூர், சென்னை பகுதியில் அமைந்துள்ள முத்துக்குமார் நினைவிடத்தில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் மாலை அணிவித்து வீர வணக்கத்தை செலுத்தினார். இதில் திராவிடர் விடுதலைக் கழக புதுச்சேரி மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, அருண், கன்னியப்பன், முரளி, வடசென்னை பாஸ்கர், தட்சணாமூர்த்தி ஆகியோர் வீரவணக்கம் செலுத்தினர்.

## மொழிப் போர் தியாகிகள் நினைவுத் தூண்களுக்கு தோழர்கள் மரியாதை




இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் நீத்த மொழிப்போர் தியாகிகள் நினைவுநாளில், அ.வ.அ.கல்லூரி வாயிலில் அமைந்துள்ள மொழிப்போர் ஈகி சாரங்கபாணி நினைவுதூணில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மரியாதை செலுத்தினார்கள். விசிக திருச்சி மாவட்ட நெறியாளர் வேலு.குணவேந்தன், தமிழர் உரிமை இயக்கம் சுப்பு. மகேசு கலந்து கொண்டனர்.

## சென்னையில் நடந்த கருத்தரங்கு : நாட்டை ஆள்வது அரசியல் சட்டமா? சனாதன தர்மமா?

‘நாட்டை ஆள்வது அரசமைப்புச் சட்டமா? சனாதன தர்மமா?’ எனும் தலைப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாணவர் பிரிவு (முற்போக்கு மாணவர் கழகம்), ஜனவரி 23ஆம் தேதி சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவை அரங்கில் கருத்துப் பகிர்வு, நிகழ்ச்சியை மாலை 5 மணியளவில் நடத்தியது. பேராசிரியர் அருணன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் நாட்டை ஆள்வது சனாதன தர்மமே என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தி.க. பரப்புரைச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி பேசினர். ‘அரசமைப்புச் சட்டமே’ எனும் தலைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். அப்துல் ரஹ்மான், ‘ஆழ்வார்க்கடியார்’ மை.பா. நாராயணன் ஆகியோர் பேசினர். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் நிறைவுரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st Feburary 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN